**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**11**
**Defence**
**Court**

**Name** **:**ஆறுமுகம்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21.12.2022

__முதல் விசாரணை__:

நான் தற்போது தென்காசியில் இளஞ்சில் குடியிருந்துவருகிறேன். தென்காசியில் மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் ஸ்ரீராம் பிரஸ் என்ற பெயரில் அச்சு ஆபீஸ் நடத்தி வருகிறேன். புகார்தாரர் அலாவுதீனை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. புகார்சம்பந்தமாகவும், வழக்கு சம்பந்தமாகவும் எனக்கு தெரியாது- போலீசர் என்னை விசாரிக்கவில்லை.

நான் சம்பவத்தன்று எனக்கு உடல் நிலை சரியில்லாதால் நான் அன்று அச்சு ஆபீஸ் செல்லவில்லை. 10 நாட்கள் கழித்து அச்சு ஆபீஸ் சென்றேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும் தற்போது வேண்டுமென்றே போலீசர் விசாரிக்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசர் விசாரித்தபோது 14.08.2007 அன்று 10.15 மணிக்கு நான எனது பிரிண்டிங்பிரஸ்சில் இருந்தபோது என் கடைக்கு கீழ புறம் வண்டிகள் மோதியதுபோல் சப்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அலாவுதீன் ஓட்டி சென்ற மோட்டார் சைக்கிளும் சக்திபாண்டியன் ஓட்டி வந்த அம்பாசிடர் காரும் மோதி மோட்டார் சைக்கிள் கீழே விழுந்து கிடந்தது என்றும் அலாவுதீனின் வாகனத்திற்கு பின்னர் இரண்டு ஆட்டோக்களில் வந்திருந்த சிலர் ஆயுதங்களுடன் இறங்கினார்கள் என்றும் அபப்போது சக்திபாண்டியனும் அவருடன் வந்தவர்களும் ஆயுதங்களுடன் காரில் இருந்து இறங்கி ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டார்கள் என்றும், என் கடைக்கு மேல் புறம் உள்ள முத்து டீக்கடை முன்பாக சக்திபாண்டியன் தம்பி சுரேஷ், சைய்யது அலி, மீரான் மைதீன், ஆகியோர் சுரேஷ் என்பவரை அரிவாளால் வெட்டியும் நவாஸ், நாகூர்மீரான், செய்யது சுலைமான் சேட் செந்திலை வெட்டினார்கள் என்றும் சண்முகம், அப்துல்லாவை இரும்பால் அடித்தார் என்றும், அலெக்ஸ் என்பவர் நாகூர் மீரானையும் அசன்கனியையும் வெட்டினார் என்றும் பிஸ்தா மணி என்ற

மணிகண்டன் அசன்கனியையும், பசீரையும் வெட்டினார் என்றும் நான் பயந்து எனது ஆபீசுக்குள் மறைந்துகொண்டேன் என்றும் கலவரம் முடிந்தவுடன் நான் கடையை முடிவிட்டு ஓடினேன் என்றும் அன்று நடந்த கலவரத்தில் சேகர் , சுரேஷ், செந்தில், அசன்கனி, பசீர், நாகூர்மீரான் இறந்துபோனார்கள் என்றும் மேலும் பலர் காயம் அடைந்ததாக கேள்விப்பட்டேன் என்றும் இரண்டுநாட்கள் கடையை பூட்டிவிட்டு சென்றுவிட்டதால் சேரன்மாதேவி காவல் துணைகண்காணிப்பாளர் விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதும் அதே இடத்தில் தான் அச்சு ஆபிஸ் நடத்திவருகிறேன். மேலமுத்தாரம் கோவில் தெருவிற்கு வடக்கேயும், கிழக்கேயும், தெற்கேயும் அதிகமாக இஸ்லாமியர்கள் கடைநடத்தி வருகிறார்கள் என்றளால் இஸ்லாமியர் மட்டும் அல்ல அனைவரும் கடை நடத்தி வருகிறார்கள். நான் இஸ்லாமியருக்கு பயந்தும் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**